விலை ரூபா. 50/- www.puthiyakural.com தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

புதிய குரல்
PUTHIYAKURAL
Puthiya Kural - Bringing News Stories that are relevant from Sri Lanka with a Focus on North & East

02 ஏப்பிரல் 2022 | பக்கங்கள் 08 | REGISTERED NEWS PAPER IN SRI LANKA

ஐரோப்பா முழுதும் டிஜிடல்
தெளிவில் உங்கள் வாகனங்களில் மற்றும்
இல்லங்களில் புதிய தொழில்நுட்பத்தில்...
நமது FM
namathufm.com
GET IT ON Google Play
Download on the App Store
LIVE 24 HOURS STREAM

# அனைத்து அமைச்சர்களும் இராஜினாமா!

## புதிய அமைச்சரவை இன்று பதவியேற்பு?; மகிந்த பதவியில் தொடர்ந்தும் நீடிப்பார்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...



## கிழக்கு பல்கலை மாணவர்களும் போராட்டத்தில் குதிப்பு

அரசாங்கத்திற்கெதிரான மக்கள் போராட்டமானது மேலும் தீவிரமடைந்துள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் நேற்று பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு முன்பாக அரசாங்கத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்,குறித்த போராட்டத்தினை கட்டுப்படுத்துவதற்காக

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

## அரசாங்கத்தின் சகல தடைகளையும் உடைத்தெறிந்து வீதியில் குவிந்த மக்கள்



இலங்கையில் நேற்று மாபெரும் மக்கள் போராட்டம் முன்னெடுக்க இருந்த நிலையில் அதனை தடுக்க அரசாங்கம் முன்னெடுத்த அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று போராட்டம் இடம்பெறப்போவதாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், அதனை நிறுத்தும் முகமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 6மணி தொடக்கம் இன்று திங்கட்கிழமை காலை 6மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் அரசியல்வாதிகள் சுயலாபங்களுக்காக பதவியை வைத்துக்கொண்டிருப்பது வேதனையானது



இந்த அரசாங்கம் மக்களுக்குச் செய்யும் மோசமான செயற்பாடுகளைக் கண்டு ஆளுங்கட்சியில் உள்ள அமைச்சர்களே இன்று பதவியைத் துறந்து சென்றுள்ள நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் தமது சுயலாபங்களுக்காகப் பதவியை வைத்துக்கொண்டிருப்பது வேதனையான விடயம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில்

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

## இன்று 5 மணிநேர மின்வெட்டு

இன்று திங்கட் கிழமை (04) 5 மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அங்கிகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, A,B,C,D,E,F,G,H,I,J,K,L, P,Q,R,S,T,U,V, W ஆகிய

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...



## பதவியை துறந்த தயாசிறி

தற்போதைய அமைச்சரவையில் உள்ள அனைத்து அமைச்சர்களும் தங்களது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்துள்ள நிலையில், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு கையளித்துள்ளார்.

இனி எல்லாமே ANYTIME
MOBILE
SLT-MOBITEL MOBILE முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள் இரவு பகல் எனும் வேறுபாடுகளின்றி விரும்பும் வகையில் DATA வினைப் பயன்படுத்துங்கள்.
399/- 6.5 GB | 499/- 9 GB | 699/- 14 GB | 999/- 20 GB | 1999/- 60 GB
4G LTE
SLTMOBITEL

# தமிழ் அரசியல்வாதிகள் சுயலாபங்களுக்காக பதவியை வைத்துக்கொண்டிருப்பது வேதனையானது

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது வேதனையான விடயமாகவிருக்கின்றது. நாடுமுழுவதும் வெடித்துள்ள போராட்டம் காரணமாக ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாடாளுமன்ற அமர்வு ஆரம்பித்த கடந்த ஒன்றரை வருடங்களாக நாங்கள் இதனை தெரிவித்து வருகின்றோம். காயம் ஒன்று இருக்கும்போது அந்த காயத்திற்கு மருந்திட்டு அதனை குணப்படுத்தாமல் அதனை மூடிமூடி வைத்து இன்று அந்த காயம் காரணமாகக் காலை வெட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே இந்த ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இன்று எரிமலையினை சூழ பஞ்சுகள் இருப்பதுபோன்றே மக்கள் உள்ளனர். இன்று எவர் போராட்டத்திற்கு அழைத்தாலும் தயார் நிலையிலேயே மக்கள் உள்ளனர். மக்கள் எதிர்நோக்கும் கஷ்டம் காரணமாகவே இந்த நிலையேற்பட்டுள்ளது.

இந்த நாட்டின் நிலைமை மிக மோசமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. இன்று நடைபெறும் போராட்டங்கள் அரசியல் கட்சிகள் இணைந்து முன்னெடுக்கும் போராட்டம் அல்ல. மக்களாகவே முன்வந்து முன்னெடுக்கும் போராட்டம். இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக மக்கள் படும் கஷ்டங்கள் இன்று நெருப்பு மலையாகக் காணப்படுகின்றது.

இதன் காரணமாக இந்த போராட்டங்களை அரசாங்கத்தினால் கட்டப்படுத்தமுடியாத நிலை வரும். நாங்கள் பொறுப்புள்ள அரசியல் கட்சியாக இந்த பிரச்சினையை இந்த நாட்டில் எவ்வாறு தீர்க்கமுடியும் என்றே பார்க்கவேண்டும்.

இன்று இரண்டு வருடங்களுக்கு மேலாகவும் இந்த நிலைமை இவ்வாறு நீடிக்குமானால் மக்கள் வன்முறைகள் ஊடாக தமது கோவத்தினை வெளிப்படுத்த முனையும்போது அதனை அடக்க அரசாங்கம் இராணுவத்தினரை பாவிக்கும் நிலையும் உருவாகலாம். இராணுவத்தின் குடும்பமும் இந்த நாட்டில் உள்ளது.

அவர்களின் குடும்பத்திலும் இவ்வாறான பிரச்சினைகள் இருக்கும். இன்று அரசாங்கத்தின் மீது உள்ள அதிருப்தியைக் கொண்டு ஒரு சிலர் குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றனர். கலவரத்தின்போது பாதுகாப்பு பிரிவினர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பேருந்து எரிக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட இனக்கலவரத்தின் பின்னணியில் செயற்பட்டவர் போராட்டத்திற்கான அழைப்பினை விடுத்துள்ளார். இவற்றினை பார்க்கும்போது சந்தேகத்துடனேயே பார்க்க வேண்டிய நிலையுள்ளது. தற்போதுள்ள பிரச்சினைகள் மக்களுக்கும் தெரியும். அரசியல்வாதிகளுக்கும் தெரியும்.

ஆனால் அரசாங்கத்திற்குத்தான் தெரியாத நிலையுள்ளது. அரசாங்கத்திற்கு மட்டும்தான் மக்கள் படும் கஷ்டம் தெரியாமல் உள்ளது. ஜனாதிபதி நாட்டின் உண்மை நிலையினை மக்களுக்கு எடுத்துச்சொல்லி இதற்கு மாற்றுவழியாக அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைத்து ஒரு இணக்கப்பாட்டை எட்டுவதன் மூலமே நாட்டில் உள்ள பிரச்சினையைத் தீர்க்கமுடியும்.

விரைவில் ஒரு தேர்தல் நடாத்தக்கூடிய சூழ்நிலையில்லாத காரணத்தினால் இந்த நிலைமையினை தொடர இடமளிக்கக்கூடாது. இன்றைய நாட்டில் சூழ்நிலையினால் 30வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறான நிலையில் இன்றும் வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் அடக்குமுறைகளுக்குள்ளாகப்படுகின்றனர்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தின்போது பொலிஸ் அதிகாரியொருவர் தாய் ஒருவர் மீது நடாத்திய தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதற்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு எனது ஆதரவு என்றும் இருக்கும். போராட்டம் ஒத்திவைக்கப்பட்டாலும் அந்த போராட்டம் நடைபெறும்போது நாங்கள் ஆதரவு வழங்குவோம். நாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்த வேளையில் போது கூட இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரச்சினை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தினோம்.

வடக்கு, கிழக்கில் பொருளாதார பிரச்சினைகளையும் தாண்டி பல்வேறுபட்ட பிரச்சினைகள் உள்ளது. நான் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்து நான் தெரிவித்த கருத்தினை கிழக்கு மாகாண ஆளுநர் பொய்யென்று கூறியுள்ளார்.

ஆனால் அதனை நான் ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கத் தயாராகவிருக்கின்றேன். பொருளாதார ரீதியாகவும் இனரீதியாகவும் அடக்குமுறைகள் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இன்று எம்மவர்களின் சிலர் அரசாங்கத்தின் கைக்கூலிகளாக உள்ளதே இதற்குக் காரணமாகும்.

இந்த நாட்டில் உள்ள தாய்மார் எதிர்கொள்ளும் பிரச்சினைக்காக ஹிருணிக்கா பிரேமச்சந்திரன் முன்னெடுத்த போராட்டத்தினை வரவேற்கின்றேன். அந்த போராட்ட நேரத்தில் அரசாங்கத்தின் கைக்கூலியொருவர் அந்த போராட்டத்தினை குழப்புவதற்கு முயற்சிகளை முன்னெடுத்திருந்தார்.

இன்று அரசாங்கத்துடன் இருக்கும் இராஜாங்க அமைச்சர்கள், இந்த அரசாங்கம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கும் மோசமான செயற்பாடுகளைக் கண்டு தமது பதவிகளைத் தூக்கியெறிந்துவிட்டு வெளியேறிவிட்டனர். ஆனால் தமிழர்கள் ஒருசிலர் மட்டும் அபிவிருத்திக்குழு தலைவர் பதவி, இராஜாங்க அமைச்சர் பதவியை வைத்துக்கொண்டு தங்களது சுயநலத்துக்காக அரசாங்கத்தினை ஆதரிக்கின்றது வேதனைக்குரிய விடயமாகும்.

மக்களுக்காக அரசியலுக்கு வந்த நீங்கள் ஆளும்கட்சிக்காக அரசியலுக்கு வந்தவர்களாக இருக்கக்கூடாது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தின் பதவிகளைப் பிடித்துக்கொண்டுள்ளவர்களை மக்கள் எதிர்காலத்தில் இனங்கண்டு தெற்கில் எவ்வாறு அரசியல்வாதிகள் துரத்தியடிக்கப்படுகின்றார்களோ அவ்வாறு இங்கும் அவர்கள் வரும்போது துரத்தியடிக்கவேண்டும்' இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# இன்று 5 மணிநேர மின்வெட்டு

வலயங்களுக்கு காலை 10 மணிமுதல் பிற்பகல் 5மணிவரை 3 மணித்தியாலங்களும் 30 நிமிடங்கள் மின்வெட்டு அமுலாகவுள்ளது. அத்துடன், மாலை 6 மணிமுதல் மாலை 9 மணி வரை 1 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும், CC1 பகுதிகளுக்கு காலை 6 மணிமுதல் காலை 10 மணிவரை 4 மணித்தியாலங்களும் மின்வெட்டு அமுலாக்கப்படவுள்ளது.

# கிழக்கு பல்கலை மாணவர்களும் போராட்டத்தில் குதிப்பு

கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முன்பாக பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் சற்றுமுன்னர் போராட்டத்தில் குதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தி தீப்பந்தம் ஏந்தியவாறு தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்றலில் சற்று முன்னர் மாபெரும் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டுள்ளனர்.

# அரசாங்கத்தின் சகல தடைகளையும் உடைத்தெறிந்து வீதியில் குவிந்த மக்கள்

இந்நிலையில் அவ் ஊரடங்கு உத்தரவையும் மீறி மக்களும் எதிர்க் கட்சி அரசியல் பிரமுகர்களும் கொழும்பில் போராட்டத்தில் இறங்கினர்.

போராட்டத்தை நிறுத்த பொலிஸாரும் இராணுவ படையினரும் மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளதது.

அத்துடன் இணையதளங்களை முடக்கி அதன்மூலம் மக்களைத் திசைதிருப்ப அரசாங்கம் முயன்றது. இம்முயற்சியும் தோல்வியிலேயே முடிவடைந்தது. இவ்வளவு காலமும் பொறுமை காத்து வந்த மக்கள் இன்று அதனை இழந்து அரசை ஆட்டம் காணவைத்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'சமூக ஊடகங்களை முடக்குவதை நான் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன். நான் இப்போது விபிஎன் பயன்படுத்துவதைப் போலவே அனைவராலும் பயன்படுத்த முடியும்.

இத்தகைய தடைகளை முற்றிலும் பயனற்றது. அதிகாரிகள் இன்னும் முற்போக்காகச் சிந்தித்து இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்' என நாமல் ராஜபக்ச தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்தொன்றைப் பதிவிட்டிருந்தார்.

இவ்வாறு சமூக வலைத்தள முடக்கத்துக்கு வந்த எதிர்ப்புகளை தொடர்ந்து முடக்கப்பட்டிருந்த சமூக ஊடகங்கள் நேற்று பிற்பகல் 3.30க்கு நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அனைத்து அமைச்சர்களும் இராஜினாமா!

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார சிக்கல் நிலைமைக்கு மத்தியில் ,தற்போது அமைச்சுப் பதவிகளில் உள்ள அனைவரும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நேற்று இரவு பிரதமர் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதமர் பதவியை இராஜினாமா செய்யக் கூடாதென இந்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதுடன் , பிரதமர் தமது பதவியில் நீடிக்க வேண்டுமென அமைச்சர்கள் அனைவரும் கையொப்பமிட்ட கடிதமொன்று இன்று திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. நெருக்கடி நிலைமையை தணிக்க பதவி விலக தயாரென பிரதமர் மஹிந்த இங்கு கூறினாலும் அமைச்சர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை.

இன்று காலை அனைத்து அமைச்சர்களும் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர் . அப்போது இந்த கடிதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது .

# அவசரகால பிரகடனத்தை மீளப் பெறுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து!



அவசரகால பிரகடனத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக மீளப் பெற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு அமைய அவரகால சட்டம் வெள்ளிக்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், தமது கூட்டணியின் நிலைப்பாட்டை தனது டுவிட்டர் பக்கத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவசரகால பிரகடனத்தை ஜனாதிபதி உடனடியாக மீளப் பெற வேண்டும் எனவும், அரசாங்கத்திற்கு எதிரான எதிர்பினையும் போராட்டங்களையும் இதன் மூலம் அடக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 13 ஆவது திருத்தத்தை தீர்விற்கான ஆரம்ப புள்ளியாகக் கூட கருத முடியாது

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஆரம்ப புள்ளியாகக் கூட கருத முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னிணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சு. ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிற்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சரை நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைக்காமையால், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதுவர் ஊடாக குறித்த கடிதத்தை அனுப்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

34 வருடங்களுக்கு மேலாக 13 ஆம் திருத்தமும் மாகாண சபைகளும் இலங்கை அரசியலமைப்பில் இருந்தும் கூட, தமிழ் மக்கள் சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் ஒற்றையாட்சியை முற்றுமுழுதாக நிராகரித்தே தமது ஏகோபித்த ஆணையை வழங்கியதாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
TAMIL NATIONAL PEOPLE'S FRONT
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
ALL CEYLON TAMIL CONGRESS

தமிழ் தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற, சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக் கூடிய, இணைந்த வடக்கு கிழக்கு தாயகம் பாதுகாக்கப்படுகின்ற சமஷ்டி தீர்வையை தொடர்ந்தும் கோரி நிற்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 34 வருடங்களாக மக்களின் ஆணைகளை பெற்றவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில், 13 ஆம் திருத்தம் ஒரு பேசுபொருளாகக் கூட பதிவு செய்யப்படவில்லை என அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கிலெடுக்கப்படாத, நிராகரிக்கப்பட்ட விடயமாக தமிழ் தேசிய அரங்கில் 13 ஆம் திருத்தம் காணப்படுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி, இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு ஈழ தமிழ் தேசம் உறுதியாக செயற்பட்டு வரும் நிலையில், மக்களின் நலன்களை பேணும் வகையில், இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகித்து, ஒற்றையாட்சி அரசியலமைப்பை கொண்டு வருவதை தடுத்து, தமிழ் தேசியம் அங்கீகரிக்கும் சமஷ்டி அரசியல் யாப்பினை கொண்டுவர, இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஊரடங்கிற்கு மத்தியிலும் எதிர்க்கட்சியினர் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!



கொழும்பு, மார்க்கஸ் பெர்ணான்டோ மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்திற்கு அண்மையில் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷடி சில்வா, சரத் பொன்சேகா, நளின் பண்டார, கபிர் காசிம், ஹக்கீம், முஜீப்பு ரகுமான், ராஜித சேனாரத்ன, வடிவேல் சுரேஸ் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் ஜனநாயகத்தை நிலைநிறுத்துமாறு கோரியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கலந்து கொண்டவர்கள் வெள்ளை நிறத்திலான ஆடையை அணிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ஊரடங்கு அறிவிப்பும் மக்களின் அவல நிலையும்

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (02) மாலை 6 மணி தொடக்கம் இன்று (04) திங்கட்கிழமை அதிகாலை 6 மணி வரை ஊரடங்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் மக்கள் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் எரிபொருட்களை பெற்றுக் கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் காணப்பட்டதோடு, மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்துள்ளனர்.

மன்னார் நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் மரக்கறி விற்பனை நிலையங்களில் அதிக அளவு மக்கள் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிலையில் வழமை போன்று எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

6 மணியை கடந்த நிலையிலும் மன்னார் நகர் பகுதியில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் வழமை போன்று இயங்கி வந்த நிலையில், நேற்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மின்தடை ஏற்பட்ட நிலையில் மக்களின் நடமாட்டம் இன்றி காணப்பட்டது.



# அரசிலிருந்து இ.தொ.கா. வெளியேறும்

அமைச்சு பதவிகள் அல்ல, மக்களின் தீர்மானமே காங்கிரசுக்கு முக்கியம். எனவே, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றப்படாவிட்டால் அரசிலிருந்து இ.தொ.கா. வெளியேறும் - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று முன்தினம் சனிக்கிழமை (02.04.2022) அறிவித்தார்.

அத்துடன், தமிழ் முற்போக்கு கூட்டணியால் தலவாக்கலையில் நாளை முன்னெடுக்கவுள்ள போராட்டத்துக்கு தமது கட்சி எதிர்க்கவில்லை எனவும், அதனை ஆதரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (02.04.2022) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசின் பங்காளிக்கட்சியாக இருந்தாலும், மக்களை பாதுகாப்பதே எமது முதன்மை நோக்கமாகும்.

அந்தவகையில் ஜனாதிபதியின் வீட்டுக்கு செல்லும் மிரிஹான வழியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் மக்கள்மீது நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இது தவறான செயலாகும். என்னதான் வதந்திகள் பரவினாலும், முறையான விசாரணையின்றி மக்களை கைது செய்து, துன்புறுத்துவது நியாயம் அல்ல. சஜித் பிரேமதாச தலைமையில் தலவாக்கலையில் நாளைய தினம் போராட்டமொன்று இடம்பெறவுள்ளது. இந்த போராட்டத்துக்கு காங்கிரஸ் எதிர்ப்பை தெரிவிக்கவில்லை .

ஏனெனில் சமையல் எரிவாயு, எரிபொருள் இன்றி மக்கள் இன்று துன்பப்படுகின்றனர். இதற்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்குகின்றனர். அதன் பின்னணியில் எந்த கட்சி இருந்தாலும் நாம் ஆதரவு. மரிஹான போராட்டத்தின்போது ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தையும் கண்டிக்கின்றோம். அது நியாயமற்ற செயலாகும். மக்களுக்காக முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அரசுக்கு எமது எதிர்ப்பை காட்டிவிட்டோம்.

சர்வக்கட்சி மாநாட்டை புறக்கணித்தோம். ஆனால் அமைச்சு பதவி கிடைக்கவில்லை என்பதால்தான் இ.தொ.கா. இப்படி செயற்பட்டது என சிலர் வதந்தி பரப்பினர். இராணுவத்துக்காக 10 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் பல்கலைக்கழகம் அமையவுள்ள இடமும் உள்ளடங்குகின்றது. இதனை நாம் எதிர்த்தோம். மக்களுக்கு வேலை நடக்கனும், நாட்டில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

மக்களுக்கு சார்பான முடிவையே நாம் எடுப்போம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனால் அரசிலிருந்து காங்கிரஸ் வெளியேறும். இன்னும் ஓரிரு தினங்களில் முடிவு அறிவிக்கப்படும். - என்றார்.

# இலங்கைக்கு என்ன நடந்தது?



ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே , பெரும்பாலான கிராமங்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றன. குடியிருப்பாளர்களுக்குத் தேவையான அனைத்தையும் அவர்கள் உற்பத்திசெய்தனர் . ஆனால் உலகமே இப்போது ஒரு கிராமமாக இருந்தாலும் நவீனதேசிய அரசுகள்தன்னிறைவு பெறுவது அரிது. அவர்கள் தங்கள் மிகையான உற்பத்தியை ஏற்றுமதி செய்கிறார்கள். அவர்கள் வெளிநாட்டு கையிருப்புக்களை சம்பாதித்து சேமிக்கிறார்கள். மேலும், அவர்கள் தங்கள் பற்றாக்குறைகளை மறைக்க இறக்குமதி செய்கிறார்கள். இலங்கையின் தற்போதைய பிரச்சினை என்னவென்றால், வெளியுலகில் இருந்து தனக்குத் தேவையானதை வாங்குவதற்கு போதுமான பணம் இல்லையென்பதாகும்.

## இப்போது...

அத்தியாவசியப் பொருட்களுக்கான இறக்குமதிசெலவை ஈடுசெய்வதற்காக, இந்தியாவிடம் இருந்து 1 பில்லியன் டொலர் கடனை இலங்கை நாடியுள்ளது, பல தசாப்தங்களின் பின் நாடு அதன் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக , செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

உணவு மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு பணம் செலுத்த முடியாமல் திணறி வரும் இலங்கையை மீட்க இந்தியா ஏற்கனவே உறுதியளித்துள்ள 1 பில்லியன்டொலர்களுக்கு இது மேலதிகமானதாகும் .

## இது எவ்வளவுக்கு தீங்கானது ?

அந்நிய செலாவணி கையிருப்பு 2020 ஜனவரி முதல் 70 சதவீதம் குறைந்துள்ளது. இலங்கையின் வெளிநாட்டு நாணய கையிருப்பு பெப்ரவரியில் 2.31 பில்லியன் டொலர்களாக வீழ்ச்சியடைந்து 2021 டிசம்பர் முதல் ஜனவரி 2022 வரை 779 மில்லியன் டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இது இலங்கையின் இறக்குமதியை நிறுத்தியதுடன் பல அத்தியாவசிய பொருட்களின் கடுமையான பற்றாக்குறைக்கு வழிவகுத்தது. நாணயம் கணிசமானஅளவு மதிப்பிழப்புக்கு உட்பட்டுள்ளது. சர்வதேசமட்டத்தில்தாராளமானமுறையில் கடன் வழங்குபவர்களைக் கண்டுபிடிப்பதற்கான அதன் முயற்சிகள் அதிகளவுக்கு வெற்றிபெறவில்லை.

## இலங்கையின் கடன்

சர்வதேச நிதி நிறுவனமொன்று அல்லது குழுவிடமிருந்து நாட்டிற்கு முறையான மீட்பு பொதி வழங்கப்படாவிட்டால், இலங்கையின் கடன் சுமை நாட்டினால் சமாளிக்க முடியாததாகிவிடும்.

2022 இல் இலங்கை சுமார் 7 பில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. அதில் ஒன்று ஜூலையில் முதிர்ச்சியடையும் சர்வதேச இறைமைப் பத்திர வடிவில் 1 பில்லியன்டொலர் ஆகும்.

இலங்கையின்அரச கடன் 2019 இல் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி டி பி ) 94 சதவீதத்திலிருந்து 2021 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 119 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் மார்ச் மாத தொடக்கத்தில் தெரிவித்துள்ளது.

சர்வதேச தரமதிப்பீட்டு முகவர் நிலையங்கள் இலங்கையின் கடன் மதிப்பீடுகளை குறைத்துள்ளன. இந்த ஆண்டு இலங்கை தனது 51 பில்லியன் டொலர் இறைமை கடனை செலுத்த முடியாமல் போகலாமென சந்தை அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

## இந்திய உதவி

அரிசி, கோதுமை, கோதுமை மா, பருப்பு வகைகள், சீனி மற்றும் மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி செலவை நிவர்த்திசெய்வதற்கு கடன் உதவியை நீடிப்பதாக இந்தியா இலங்கைக்கு உறுதியளித்துள்ளதாக கூறப்படுகிறது.

இரண்டு 1 பில்லியன்டொலர் கடன் உதவிகளைத் தவிர, இந்த ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா 400 மில்லியன்டொலர் நாணய பரிமாற்றத்தையும், எரிபொருள்களைவாங்குவதற்காக மற்றொரு 500 மில்லியன்டொலர் கடன் உதவியையும் நீடித்துள்ளது .

இது 2021 ஆம் ஆண்டில்1.5 பில்லியன் டொலராக இருக்கும் சீன நாணய பரிமாற்ற வசதிக்கு மேலதிகமாகவுள்ளது.

## இலங்கையில் வாழ்க்கைநிலை

இலங்கையர்கள் மிகவும் கடினமான காலத்தை எதிர்கொண்டுள்ளனர். உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகள் உட்பட எந்த வகையான இறக்குமதிக்கும் நிதியளிக்க அதன் வங்கிகளால் டொ லர்களைப் பாதுகாக்க முடியவில்லை. கோவிட் 19 தொற்றுநோய் 2020ஜனவரி முதல் அதன் பொருளாதார துயரங்களை மோசமாக்கியது, அதன் பிறகு கொரோனா வைரஸ் ஷெல் பரவியது இவை உலகத்தை தனித்தனி பகுதிகளாக களாக மாற்றியது.

விலைகள் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளன. கடந்த ஐந்து மாதங்களில் ஒவ்வொன்றும் பணவீக்க வீ த்தில் புதிய அதிகரிப்பை பதிவு செய்துள்ளன. பெ ப்ரவரியில் பணவீக்கம் 17.5 சதவீதமாக இருந்தது. உணவுப் பொருட்களின் விலை 25 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு ஜனவரி மாத பணவீக்க வித தமான 14 சதவீதத்திற்கு மேல் ஏற்பட்டது.

அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டதால், அரசாங்கம் கடுமையான பங்கீட்டை நாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உதாரணமாக, ஒரு நாளைக்கு ஒரு லீற்ற ர் பாலுக்கு மாறாக , ஒரு இலங்கையர் ஒரு நாளைக்கு 400 மில்லி லீற்ற ர் பாலை மட்டுமே வாங்க முடியும்.

இலங்கையின் நகரங்கள் தினசரி ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக மின் வெட்டை எதிர்கொள்கின்றன. சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் பெட்ரோல் டீசல் வாங்குவதற்கு மக்கள் கிலோமீட்டர் நீளத்திற்கு வரிசையில் நிற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது ..

## இன்றைய பிரச்சனை அல்ல

நெருக்கடியானது ஒருகண்சிமிட்டும் நேரத்தில் வந்துவிடாது. இலங்கையின் பொருளாதாரம் பல வருடங்களாக கட்டமைப்பு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் தீர்வுகாண்பதற்கு குறுக்குவழிகளை எடுத்தன .

உதாரணமாக, கடந்த 15 ஆண்டுகளில் ஒவ்வொரு அரசாங்கமும் திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யாமல் இறைமைப் பத்திரங்களை வெளியிட்டன . அதன் அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரித்தது, ஆனால் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி மூலமாக அல்லாமல் , ஆனால் வெளிநாட்டு நாணயங்களை கடன் வாங்குவதன் மூலமாகும்.. இதனால் அதன் அந்நிய செலாவணி கையிருப்பு சந்தை அதிர்ச்சிகளால் பாதிக்கப்படக்கூடியதாக அமைந்தது.

2019 இல், இலங்கை அரசாங்கம் கணிசமான வரிக் குறைப்புகளை அறிவித்தது, அது அதன் வருவாயைக் குறைத்தது. சீனாவுடனான அதன் கடன் ஏற்பாடுகளும் இந்த நெருக்கடிக்கு பங்களித்தன. கடந்த தசாப்தத்தில் 5 பில்லியன் டொ லர்களுக்கும் அதிகமான சீனக் கடனில் பெரும்பாலானவை துறைமுகங்கள், விமான நிலையம் மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற குறைந்த வருமானத் திட்டங்களுக்குச் சென்றன

கோவிட்19 தொற்றுநோய்களின் போது, வெளிநாடுகாளி பணிபுரியும் இலங்கையர்கள் அனுப்பும் பணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது அந்நியச் செலாவணியை அதிகரிக்கும் சுற்றுலாத் துறை நடைமுறையில் வீழ்ச்சிகண்டது . சுற்றுலாத்துறை இலங்கைக்கு அதிக வருமானம் ஈட்டும் துறைகளில் ஒன்றாகும். ஆனால் 2019 இல்உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பிறகு இந்தத் துறை பாதிக்கப்பட்டது. அது மீண்டு வருவதற்கு முன்பே, கோவிட்19 தொற்றுநோய் உலகை கடுமையாகத் தாக்கியது.

கோவிட் தொடர்பான தடைகளை நீக்கத் தொடங்கியபோது, ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக இருந்தது, இது பெ ப்ரவரி நடுப் பகுதி வரை சுமார் 25 சதவீதமாக இருந்தது. ரஷ்யாஉக்ரைன் போர் மற்றும் அதன் விளைவாக ரஷ்யாவில் வங்கிகள் மீதான பொருளாதாரத் தடைகள் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் பாரம்பரிய சுற்றுலா ஆதாரங்களான இந்தியா, சீனா, பிரிட்டன் மற்றும் ஜே ர்மனி ஆகியவை கோவிட்டு க்கு முன்னைய நிலைக்கு மீளவில்லை.

கோவிட்19 தொற்றுநோய் பாதிப்புகளை அம்பலப்படுத்தியது டன் இந்த நிதி குழப்பத்திலி ருந்து எவ்வாறு வெளியேறுவது என்பது பற்றி தெரியாமல் இருக்கும் சூழ்நிலையில் இலங்கையை வைத்துள்ளது .

> “இலங்கையர்கள் மிகவும் கடினமான காலத்தை எதிர்கொண்டுள்ளனர். உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகள் உட்பட எந்த வகையான இறக்குமதிக்கும் நிதியளிக்க அதன் வங்கிகளால் டொ லர்களைப் பாதுகாக்க முடியவில்லை.
> **கொவிட் 19 தொற்றுநோய் 2020 ஜனவரி முதல் அதன் பொருளாதார துயரங்களை மோசமாக்கியது, அதன் பிறகு கொரோனா வைரஸ் ல் பரவியது இவை உலகத்தை தனித்தனி பகுதிகளாக மாற்றியது.**”



பிரபாஷ் கே.தத்தா
இந்தியா ரு டே

# மலையகச் சமூகம் தலை நிமிர்ந்து நம்பிக்கையோடு வாழ வேண்டும்



ஒரு தேசம் என்பது பல்வேறு இனக்குழுக்களும் பல்வேறு சமூகமும் ஒன்றிணைந்து வாழக்கூடிய ஓர் பண்பு ஆகும். எந்தவொரு நாட்டிலும் காணப்படும். ஏந்தவொரு சமூகமோ இனமோ தனித்து வாழ முடியாதளவிற்கு இன்று சமூகம் விரிவடைந்துள்ளதுடன் உலகமயமாக்கலின் கீழ் உலகமும் சுருங்கிவிட்டது. இந்நிலையில் ஓர் இனத்தின் உதவியின்றி இன்னொரு இனம் வாழ முடியாது என்பது கண்கூடு. உலகம் எதிர் நோக்கிய பல ஆபத்தான சந்தர்ப்பங்களில் எல்லாம் ஓர் இன மக்கள் இன்னுமொரு மக்கள் இனத்திற்கு உதவிகளையும் ஒத்தாசைகளையும் செய்துள்ளனர். ஏன்பது மிக முக்கியமானது. ( இலங்கையில் 2004 ஆண்டு சுனாமி கொவிட் 2019 இயற்கை அனர்த்தங்கள் பொருளாதார நெருக்கடியுத்த காலங்கள்) ஒரு இனத்தின் சமூக கலாசாரொ பண்பாட்டு அரசியல் அம்சங்களும் இன்னொரு இனத்தின் சமூக கலாசார பண்பாட்டு அம்சங்களும் ஏதோ ஒரு வகையில் வேறுபட்டு காணப்படுகின்றது.

ரிக்கப்படாமை போக்குவரத்து சுத்தமான குடி நீர் வசதி போசாக்கு குன்றிய நிலை தாய் சேய் மரண வகிதம் அரச தொழில் வாய்ப்புக்களில் அதிக எண்ணிக்கையானோர் காணப்படாமை வைத்தியர்கள் பொறியியலாளர்கள் வக்கீல்கள் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் வியாபரரிகள் அரச நிருவாக சேவையாளர்கள் சுய தொழிலில் ஈடுபடுவோர்களின் எண்ணிக்கை இளைஞர்களின் தற்கால போக்கு பெண்களின் சமூக அந்தஸ்து சொந்தக்காணி சொந்த வீடு காணி உரிமை வீட்டு உரிமை சிறுவர் உரிமை இளவயது திருமணம் தொழில் பாதுகாப்பு சிறுவர் தொழிலாளர்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் இன்மை வருமானம் குறைவு சேமிபபு குறைவு வாழ்க்கைத்தரம் குறைவு. சமூக பாதுகாப்பு தொழில் காப்புறுதி

போன்றவற்றோடு நாம் வாழ்கின்ற தோட்ட சூழலில் முன்மாதிரிகள் இல்லாமை மக்களின் வாழ்வியலின் தன்மை பாரம்பரிய பழக்கவழக்கங்கள் மூட நம்பிக்கைகள் சுயமாக சிந்தித்து செயற்படுவதற்குமைகளை உயத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம்.

குறிப்பாக இன்றைய மலையகச் சமூகத்தை ஆட்டிப் படைக்கும் நுண் கடன் பெறுதல் மது சினிமா தொடர் நாடகங்கள் கேபில் டிவி வேறு அலை வரிசைகள் முக நூல் வட்ஸ்ஸப் கைத்தொலைபேசி போதைப்பொருள் பாவனை புகைப்பிடித்தல் வெற்றிலை மெல்லல் போசாக்கற்ற உணவுகளை உட்கொள்ளும் முறை மாணவர்கள் படிப்பதில் ஆர்வம் காட்டாமை பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக அக்கறை காட்டாமை பாடசாலை செல்லும் பிள்ளைகளை உறவினர்களிடம் விட்டு விட்டு வெளிநாட்டுக்குச் செல்லல் வெளிநாட்டில் உழைத்த பணத்தை முறையாக சேமிக்காமை பூப்புனித நீராட்டு விழா பிறந்த நாள் கொண்டாட்டம் திருமணம் சமய விழாக்கள் பண்டிகைகள் திருவிழா போன்றவற்றை கடன் வாங்கியாவது வருமானத்தை தேட முடியாமை போன்றவற்றால் மீண்டும் மீண்டும் குடும்பம் வறுமை நிலைக்கு தள்ளப்படுதல். அதாவது பிள்ளைகளின் அடைவு மட்டம் குறைதல் உயர்கல்வி கற்காமை குறைவான சம்பளத்தில் தொழிலைப் பெறுதல் போதிய வருமானம் இன்மை குடும்ப வறுமை அடிக்கடி நோய்வாய்படுதல் தொடர்ந்து உழைக்க முடியாமை கடன் சுமை குடும்ப சுமையை தாங்க முடியாமை பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அனுப்புதல் போன்ற நச்சு வட்டம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

மலையகச் சமூகத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு மட்டங்களிலிருந்தும் ஊக்கப்படுத்தல்களும் ஆலோசனை வழிகாட்டல்களும் குடும்ப திட்டமிடல்களும் சமூக நெறிப்படுத்தல்களும் அடிப்படை சமூகப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான திட்டங்கள் கலந்துரையாடல்கள் மகாநாடுகள் சமூக வளர்ச்சிக்கான முன்னெடுப்புக்

இருப்பினும் எந்தவொரு சமூகமும் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு அந்த இனத்தைச் சேர்ந்த மக்கள் குடும்பம் தனிநபர்கள் நாட்டில் உள்ள பல்வேறு துறைகளிலும் பிரகாசிக்க வேண்டும். குறிப்பாக ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அபிவிருத்திற்கும் கல்விதான் அடிப்படை ஆயுதமாகும். ஒரு சமூகத்திலுள்ளவர்கள் பல்வேறு துறைகளிலும் (அரச துறைகள் தனியார் துறைகள் வெளிநாட்டு துறைகள்) தமது ஆற்றல்களையும் திறன்களையும் திறமைகளையும் வெற்றியையும் ஈடுபாட்டையும் முயற்சியையும் ஆர்வத்தையும் ஆளுமைகளையும் போட்டிபோட்டுக் கொண்டு வெளிக்காட்ட வேண்டும். இப்கு பெருந்தோட்டத்துறைத் பாடசாலைகள் தமது பங்களிப்பை முழுமையாக வழங்க வேண்டும். ஒரு சமூகத்தின் விடிவு ஆசிரியர்களின் கைகளில் ஒப்படைக்கப்படுகின்றது என்பதை எத்தனை ஆசிரியர்கள் உணர்ந்து சமூக விடிவுக்காக கற்பிக்கின்றார்கள் என்று ஆராய வேண்டிய ஒரு விடயமாக தற்காலத்தில் காணப்படுவதை அவதானிக்கலாம்.

குறிப்பாக எந்த ஒரு சமூகத்திற்கும் வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் தேடி வராது. அச்சமூகத்தைச் சார்ந்தவர்களே அதனைத் தேடிச் செல்ல வேண்டும். அல்லது தேடிக்கொள்ள வேண்டும். கல்வி வாய்ப்பையும் தான்.

எப்போது ஒரு சமூகம் ஏனைய சமூகத்திலிருந்து பின்னடைந்து நிற்பதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்க்கும் போது பின்வரும் காரணிகளே முன்னிற்கின்றன. கல்வி நிலையில் பின்தங்கியிருத்தல் சமூக பொருளாதார காரணிகளில் பின் தங்கியிருத்தல் சுகாதாரம் சௌக்கியம் போன்றவற்றில் போதிய முன்னேற்றம் இன்மை அடிப்படை சுகாதார வசதிகள் போதாமை தோட்ட உட்கட்டமைபபு வசதிகள் அதிக

வழிகாட்டாமை தங்கி வாழும் கலாசாரம் போன்ற பல்வேறு விடயங்களை சுட்டிக் காட்டினாலும் மேற்கூறிய எந்தவொரு விடயமும் உடனடியாக தீர்த்துக்கொள்ள முடியாது. ஏன்பதும் இதற்கு நீண்டகாலம் செல்லும்; என்பதை மக்கள் உணர வேண்டும். அல்லது காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

ஒரு சமூகம் முன்னேற்றம் அடைவதற்கு இளம் தலைமுறையினரின் பங்கும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் ஆர்வமும் கடின உழைப்பும் மிகவும் அவசியம். இன்றைய இளம் தலைமுறையினர் ஒவ்வொருவரும் தன்னுடைய குடும்ப நிலையை உயர்த்துவதற்கு கனவு காண வேண்டும்.

தன்னுடைய குடும்பம் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டும். கௌரவத்தோடு வாழ வேண்டும். சுய முன்னேற்றம் சுய தொழில்களில் ஈடுபடுதல் வீண் செலவுகளை செய்யாமை சேமிப்பை செய்தல் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற வெறி ஒரு இலக்கு ஒரு நோக்கம் மன உறுதி மற்றும் காலத்திற்கு ஏற்ற மாதிரி வாழ்க்கை நிலை





தேசபந்து
இரா.சிவலிங்கம்
(MPhil)

கொண்டாடுதல் ( நுண் கடன்) தாம் வாழும் பெருந்தோட்டச் சூழலில் உள்ள சரிவர பயன்படுத்தாமை வீட்டுத் தோட்டம் மாடு வளர்ப்பு ஆடு வளர்ப்பு கோழி வளர்ப்பு மரக்கறிச் செய்கை போன்றவற்றில் ஈடுபடாமல் தொடச்சியாக தேயிலைத் தொழிலை மட்டும் நம்பி வாழ்தல்

இளைஞர்கள் தொழில் பயிற்சிகளை முறையாக சென்று படிக்காமல்(NHb) வேலை தேடுதல் உடனடியாகவே அதிக சம்பளத்தைப் பெற வேண்டும் என நினைத்து எந்வொரு தொழிலையும் சரிவர கற்றுக்கொள்ளாமை அதாவது இவர்கள் திறன் பெற்ற என் வி. கியூ சான்றிதழ் பெறாது தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் ஆவார்கள்.

இன்று பெரும்பாலும் மலையகப் பிரதேசத்தில் இளம் வயது திருமணங்கள் குடும்பங்கள் பிரிந்து வாழ்தல் சில குடும்பங்களில் அதிக எண்ணிக்கையான பிள்ளைகள் குடும்ப வருமானம் போதாமை மேலதிக

களும் மலையகச் சமூகத்திற்கான முதலீடுகளும் ஆய்வுகளும் செய்யப்பட வேண்டும். சமூக தொண்டு நிறுவனங்களும் சமூக ஆர்வளர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் சமூக அக்கறை கொண்டவர்களும் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கின்ற காரணிகளை கண்டறிந்து தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

குறிப்பாக பெண்களின் கல்வி அறிவு மட்டங்களை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதற்கு தோட்டங்கள் தோறும் பெண்கள் கழங்கள் விழிப்புணர்வு குழுக்களை அமைக்க வேண்டும். அத்துடன் இளைஞர் கழகங்கள் கல்வி அபிவிருத்தி குழுக்களை அமைக்க வேண்டும். கல்வி மகாநாடுகள் கல்வி தொடர்பான கலந்துரையாடல்கள் கருத்தரங்குகள் போன்றவற்றை தொடர்ந்து செய்ய வேண்டும்.

மலையகத்தின் முன்னேற்றம் வளர்ச்சி அபிவிருத்திற்காக மலையக மக்களின் சார்பாக ஒரு பொதுக் குழுவை பல்வேறு தரப்பிலுமிருந்து தெரிவு செய்து அதனூடாக ஆய்வுகளை சமூக ஆய்வுகளைச் செய்து முன்னுரிமை அடிப்படையில் சில வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் பல பிர்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணலாம். குறிப்பாக மலையககத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களினதும் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கின்ற மாணவர்களின் விபரங்களை திரட்டுவதன் மூலம் தொடர்ந்து அவர்கள் பல்கலைக்கழக கல்வியை தொடர்வதற்கான உதவிகளை செய்வதற்கான திட்டங்களை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். கல்விதான் மலையக சமூகத்தின் முதலீடு என்பதை சகல தரப்பினரும் உணர்ந்து செயற்படுவதற்கு முன்வர வேண்டும்.

## கோட்டபாய சிக்கன நடவடிக்கைக்கு எதிரான

# போராட்டங்களை நசுக்க அவசரகால நிலைமையை பிரகடனம் செய்தாரா?

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, அத்தியவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் நீண்ட நாளாந்த மின்வெட்டு சம்பந்தமாக கொழும்பிலும் நாடு முழுவதிலும் அதிகரித்து வரும் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய இராஜபக்ஷ நேற்று அவசரகால நிலையை அமுல்படுத்தினார்.

'பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பராமரித்தல்' ஆகியவற்றிற்காக அவசரநிலை அவசியமானது என்று அந்த அறிவிப்பு கூறியது. 'விநியோகங்கள் மற்றும் சேவைகளைப் பராமரித்தல்' என்பதில், ராஜபக்ஷவின் அவசரகாலச் சட்டத்தின் உண்மையான நோக்கம், தற்போதைய எதிர்ப்புக்களை நசுக்குவது மட்டுமன்றி, அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிரான தொழிலாள வர்க்க வேலைநிறுத்தங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் எழுச்சி அலைகளுக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்டது என்பது தெளிவாகிறது.

ஏற்றுமதி வருமானம், சுற்றுலாப் பயணிகளின் வருகை, புலம்பெயர் தொழிலாளர்களிடம் இருந்து வரும் பணம் ஆகியவற்றிலான சரிவு மற்றும் அதிகரித்து வரும் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துதல் போன்றவற்றால் ராஜபக்ஷ அரசாங்கம் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது. இது கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் உக்ரைனில் இப்போது நடந்து வரும் போரினால் மோசமடைந்துள்ளது.

பெப்ரவரியில், ஒன்றரை மாத இறக்குமதிகளுக்கு மட்டுமே இலங்கைக்கு அந்நிய செலாவணி கையிருப்பு இருந்தது. இது எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் மருந்து விநியோகங்களில் கூட கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் இல்லாததால் மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், எரிபொருள் மற்றும் கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களில் சமையல் எரிவாயுக்காக நீண்ட வரிசையில் நிற்பது பொதுவானதாக ஆகியுள்ளது.

கடந்த மாதம், சர்வதேச நாணய நிதியம் கட்டளையிட்ட கடுமையான சிக்கன நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டமை, ரூபாயின் கூடுதலான மதிப்பிழப்பு, மானியங்களில் வெட்டுக்கள் மற்றும் அரச துறையில் மறுசீரமைப்பும் தொழிலாள வர்க்கத்தின் வேலைகள், வாழ்க்கை நிலைமைகள் மற்றும் ஊதியங்கள் மீது இன்னும் ஆழமான தாக்குதல்களைக் குறிக்கும்.

இராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிரான தற்போதைய எதிர்ப்புக்கள் மேலும் மேலும் தன்னிச்சையான மற்றும் வெகுஜனத் தன்மையை எடுத்து வருகின்றன. மார்ச் 31 அன்று, சுமார் 100 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பின் புறநகர்ப் பகுதியான நுகேகொட, மிரிஹானாவில் உள்ள ஜனாதிபதி இராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லத்திற்குச் செல்லும் பாதையை மறித்துள்ளனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதியின் வீட்டை முற்றுகையிட முயன்றதோடு, 'கோடா வீட்டுக்குப் போ' என்று கோஷமிட்டதுடன் அவரை பதவி விலகுமாறு கோரினர்.

சுதந்திர வீடியோ ஊடகவியலாளர் சஞ்சீவ கல்லகே உட்பட 50 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பொலிஸாரால் தாக்கப்பட்டு காயமடைந்த கல்லகே, சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்லவிடாமல் பொலிஸார் தன்னை தடுத்ததாக முறைப்பாடு செய்துள்ளார்.

ஆங்கில மொழி டெய்லி மிரர் பத்திரிகையின் நிசல் பதுகே, வருண வன்னியாராச்சி ஆகிய இரு ஊடகவியலாளர்கள், கற்கள் மற்றும் பிற மழுங்கிய பொருட்களால் தாக்கப்பட்டதில் அவர்களின் தலை மற்றும் கைகளில் பல காயங்களுக்கு உள்ளாகினர். போராட்டக்காரர்களுடனான மோதலில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருபத்தி எட்டு பேர் நீதிமன்றங்களுக்கு முன் கொண்டுவரப்பட்டனர். 22 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய ஆறு பேர் ஏப்ரல் 4 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். மீதமுள்ளவர்கள் பொலிஸ் அடக்குமுறையின் போது ஏற்பட்ட காயங்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

மிரிஹான போராட்டத்தின் போது பொலிஸ் பஸ் மற்றும் ஜீப் உட்பட சில வாகனங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட காணொளி காட்சிகளில் முகவர் ஆத்திரமூட்டல்காரர்களை காணக்கூடியதாக உள்ளது. சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள இந்த வீடியோ, குறித்த பஸ், போராட்டக்காரர்கள் இருந்த இடத்தில் இல்லாமல், பொலிசார் இருக்கும் பக்கத்திலேயே இருந்தது என்பதை தெளிவாகக் காட்டுகிறது. அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பஸ்சுக்கு தீ வைப்பதைக் காணலாம். அந்த தனிநபரை தடுக்க பொலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது, போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்



புகைப் பிரயோகம் உட்பட அடுத்தடுத்த பொலிஸ் தாக்குதலை நியாயப்படுத்த, இந்தச் சம்பவம் பயன்படுத்தப்பட்டது என்று பலமாக பரிந்துரைக்கிறது.

மிரிஹான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட அஜித் பெரேரா, 26, அல் ஜசீரா ஊடகத்திடம் பின்வருமாறு கூறினார்: தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சார வெட்டு போன்றவற்றை எதிர்க்கவே நாங்கள் வந்தோம்... ஜனாதிபதியின் வீட்டிற்கு வருவதற்கான முடிவு தன்னிச்சையானது. இவ்வளவு அழிவுகளை ஏற்படுத்திய ஜனாதிபதி வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். மற்றொரு எதிர்பாளரான முகமது அஸ்ரி, 21, கூறியதாவது, பொருளாதாரம் மிகவும் மோசமாகிவிட்டது, எங்களால் இரண்டு வேளை உணவை ஒரு நாளைக்கு கூட சாப்பிட முடியாது. என் வாழ்நாளில் இவ்வளவு மோசமான விஷயங்கள் இருந்ததில்லை. கோட்டா போக வேண்டும்.

களனி மற்றும் கல்கிசை உட்பட கொழும்பு பிரதேசத்தின் ஏனைய இடங்களில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் வெடித்தன. களனியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பில் இருந்து மலையகத் தலைநகர் கண்டி வரையிலான பிரதான நெடுஞ்சாலையை மறித்து மரக்குற்றிகளை எரித்தனர். போராட்டக்காரர் சமன் வனசிங்க, 'நான் கோபமாக இருக்கிறேன், எல்லோரும் கோபமாக இருக்கிறார்கள்... இப்போது என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்? அனைத்து இடங்களிலும் போராட்டங்கள் நடத்தப்படும் என்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார். போராட்டங்கள் பரவுவதைத் தடுக்கும் முயற்சியில், கொழும்பின் வடக்கு, தெற்கு மற்றும் மத்தியப் பிரிவுகளிலும், நுகேகொட, களனி மற்றும் கல்கிசையிலும் பொலிசார் உடனடி ஊரடங்குச் சட்டத்தை விதித்தனர். வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நிலையில், மேல் மாகாணம் முழுவதும் நள்ளிரவு முதல் சனிக்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டத்தை பொலிஸ் மா அதிபர் அறிவித்தார்.

அனைத்து எதிர்ப்புக்களையும் குற்றமாக்க இராஜபக்ஷ அரசாங்கம் மேற்கொள்ளும் நகர்வுகளை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், ஜனாதிபதி ஊடகப் பிரிவு, இராஜபக்ஷவின் இல்லத்திற்கு அருகில் நடந்த போராட்டங்களின் பின்னணியில் 'ஒரு தீவிரவாதக் குழு' இருப்பதாக வெள்ளியன்று அறிவித்தது. இந்த குற்றச்சாட்டிற்கு எந்த ஆதாரமும் இல்லை. கைது செய்யப்பட்டவர்களில் பலர் 'ஒழுங்கமைக்கப்பட்ட தீவிரவாதிகள்' என்றும் அது கூறியுள்ளது.

'தீவிரவாதம்' என்ற குற்றச்சாட்டுக்கு ஒரு இனவாத பெயர்விசேடனம் சேர்க்கப்படவில்லை. எவ்வாறாயினும், வெகுஜன ஆர்ப்பாட்டங்களைத் தடம் புரட்ட முயற்சிப்பதற்கும், அரச அடக்குமுறையை நியாயப்படுத்துவதற்கும் அவர்கள் இனவாதத்தைப் பயன்படுத்துவதற்கு நீண்ட காலம் எடுக்காது. இராஜபக்ஷ முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாதத்தைத் தூண்டுவதற்காக இஸ்லாமிய தீவிரவாதிகளால் 2019 ஈஸ்டர் ஞாயிறு அன்று நடத்தப்பட்ட பயங்கரவாத குண்டுத் தாக்குதலை பற்றிக்கொண்டதோடு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தமிழர் விரோத உணர்வைத் தூண்டிவந்துள்ளார்.

இராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஏப்ரல் 3, நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மற்றும் ஏனைய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்த சமூக ஊடகங்கள் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று முனினம் மாலை 6 மணியிலிருந்து இன்று காலை 6 மணிவரை முழு ஊரடங்கு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்தவர்கள் 'நமக்காகவும், எமது நாட்டிற்காகவும், எமது எதிர்காலத்திற்காகவும்' வீதிக்கு வருமாறு மக்களை வலியுறுத்தியிருந்தனர். எந்தவொரு அரசியல் கட்சியின் பெயரும் இல்லாமல் கையால் எழுதப்பட்ட பதாகைகளை கொண்டு வருமாறு அவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர்.

'இந்த நெருக்கடிக்கு எதிராக பொது மக்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்க உரிமை உண்டு' என்று ஜே.வி.பி. பதற்றத்துடன் அறிவித்த போதிலும், எதிர்ப்புக்களின் பின்னால் 'அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய அமைப்பாளர் அல்லது குழுவைக் காண முடியவில்லை' என்று கவலை தெரிவித்தது. ஐ.தே.க. வியாழன் பிற்பகல் வெளியிடப்பட்ட அறிக்கை, 'அநாமதேய குழுக்களால் ஏற்பாடு செய்யப்படும் எந்தவொரு போராட்டத்திலும் சேரப்போவதில்லை' என்று கூறியது. ஆர்ப்பாட்டங்களை 'அரபு வசந்தத்தின் இலங்கையின் பதிப்பு' என்று விவரித்த தேசிய சுதந்திர முன்னணி, தாம் உட்பட அரசாங்கக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகள், ஏப்ரல் 3 எதிர்ப்புக்களுக்கு ஆதரவளிக்கவில்லை என்று மேலும் கூறியது. பிரதான பாராளுமன்ற எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (ஐ.ம.ச.), அரசாங்கத்திற்கு எதிராக வளர்ந்து வரும் மக்கள் எதிர்ப்பை தனது சொந்த அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்த முயல்கிறது. ஐ.ம.ச. போராட்டங்களை ஆதரிப்பதாகக் கூறிய போதிலும், குறித்த ஏற்பாடுகளுக்கும் தங்கள் அமைப்புக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று மறுத்தது.

ராஜபக்ஷ அரசாங்கத்தை விமர்சிக்கும் அதே வேளை, ஐ.தே.க., ஐ.ம.ச. மற்றும் ஜே.வி.பி.க்கும் அதன் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் கட்டளையிட்ட சிக்கன நடவடிக்கைகள் சம்பந்தமாக எந்த அடிப்படை எதிர்ப்பும் கொண்டிருக்கவில்லை. ஐ.தே.க. மற்றும் ஐ.ம.ச., முன்னர் சர்வதேச நாணய நிதியத்தை அணுகுமாறு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. ஜே.வி.பி., சர்வதேச நாணய நிதிய நடவடிக்கைகள் குறித்து மௌனம் காப்பதானது அது ஆட்சியில் இருந்தால் அதே கொள்கைகளை அமுல்படுத்தும் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

தனது சிக்கன நடவடிக்கைகள் இலகுவாக அமுல்படுத்த முடியாது, அது தொழிலாள வர்க்கம் மற்றும் கிராமப்புற வறியவர்களிடமிருந்து பாரிய எதிர்ப்பைத் தூண்டும் என்பதை இராஜபக்ஷ அரசாங்கம் நன்கு அறிந்துள்ளது. இதனாலேயே அது அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது மற்றும் பொலிஸ்-அரசு ஆட்சி வழிமுறைகளை அதிகளவில் நம்பியுள்ளது.

ஏப்ரல் 3 எதிர்ப்புக்கள் 'அரசியல் சார்பற்றதாக' இருக்க வேண்டும் என்று அமைப்பாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். இது அனைத்து பிரதான கட்சிகள் மீதும் காணப்படும் பரவலான பொது விரோதத்தை பிரதிபலிக்கிறது. அரசாங்கத்திற்கு எதிராக மட்டுமல்ல, முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் மற்றும் சிக்கன நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் முழு அரசியல் ஸ்தாபனத்திற்கும் எதிரான அரசியல் போராட்டத்தை தாங்கள் எதிர்கொள்வதை தொழிலாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தாங்களே நடத்தும் போராட்டங்கள் எவ்வளவு பெரிய போர்க்குணமிக்கதாக இருந்தாலும், அவை உழைக்கும் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியைத் தீர்க்கப் போவதில்லை. மையப் பிரச்சினை 'அரசியல் வேண்டாம்' என்பதல்ல, மாறாக தொழிலாள வர்க்கத்தின் ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை உட்பட எல்லாவற்றையும் விட இலாபத்தை முன்னிலைப்படுத்தும் முதலாளித்துவ முறைமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு சோசலிச மற்றும் சர்வதேச முன்னோக்கிற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதே ஆகும்.

**நன்றி: WSWS**

# பிரதமர் இம்ரான் கானின் நம்பிக்கையில்லா தீர்மானம் நிராகரிப்பு

## நாடாளுமன்றத்தை கலைக்க கோரிக்கை

நம்பிக்கையில்லா தீர்மானம் அரசியல் சாசனத்திற்கு எதிரானது எனக்கூறி நம்பிக்கையில்லா தீர்மானத்தை சபாநாயகர் காசிம் கான் நிராகரித்துள்ளார்.

பாகிஸ்தானில் பணவீக்கம் அதிகரிப்பு, விலைவாசி உயர்வு ஆகியவற்றுக்கு பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான அரசுதான் காரணம் எனக் குற்றம்சாட்டி அவர் மீது எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவந்தன.

பாகிஸ்தானில் உள்ள 342 எம்.பிக்களில் 172 பேரின் ஆதரவை பெற்றால்தான் பதவியில் நீடிக்க முடியும் என்ற நிலை இம்ரான் கானுக்கு உள்ளது. ஆனால், இம்ரான் கானுக்கு அந்த அளவு ஆதரவு இல்லை. எதிர்க்கட்சிகளுக்கு 177 எம்.பிக்கள் ஆதரவு உள்ளது. இதனால், இம்ரான் கான் ஆட்சி கவிழும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

இந்த பரபரப்பான சூழலில், நேற்று



பாகிஸ்தான் நாடாளுமன்றம் கூடியது. இம்ரான் கான் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்து இருந்ததால் நாடாளுமன்றத்தை சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. காலை 11.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடும் என அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில், 1 மணி நேரம் தாமதமாக கூடியது. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நாடாளுமன்றத்திற்கு வரவில்லை.

நம்பிக்கையில்லா தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திடீர் திருப்பமாக நம்பிக்கையில்லா தீர்மானம் அரசியல் சாசனத்திற்கு எதிரானது எனக்கூறி நம்பிக்கையில்லா தீர்மானத்தை சபாநாயகர் காசிம் கான் நிராகரித்துள்ளார். மேலும், பாகிஸ்தன் நாடாளுமன்றம் ஏப்ரல் 25 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மத்தியில் மேலும் ஒரு திருப்பமாக, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும் என்று இம்ரான் கான் அந்நாட்டு அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிராகரிக்கும் முடிவு சரியானதே என்று கூறியுள்ள இம்ரான் கான், நாடாளுமன்றத்தை கலைத்து விட்டு தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

# உக்ரைனில் 300 பேரின் உடல்கள் ஒரே இடத்தில் புதைப்பு



உக்ரைனின் கீவ் நகருக்கு வெளியே புச்சா நகரில் 300 பேரை ஒரே இடத்தில் பெரிய குழியில் புதைத்து விட்டோம் என நகர மேயர் பெடோருக் கூறியுள்ளார்.

உக்ரைன் மீது ரஷிய படைகளின் தாக்குதல் தொடர்ந்து ஒரு மாதத்திற்கும் கூடுதலாக நீடித்து வருகிறது. இந்த நிலையில், இந்த வாரம் புச்சா நகரை உக்ரேனிய படைகள் மீண்டும் கைப்பற்றின. அந்நகரம் ரஷிய படைகளின் கட்டுப்பாட்டில் இருந்ததால், ஏறக்குறைய ஒரு மாதமாக அந்த நகரத்திற்கு உக்ரேனியர்கள் யாரும் செல்ல முடியவில்லை.

இந்த சூழலில், புச்சா நகரில், 280 பேரின் உடல்களை பெரிய குழிகளில் ஒரே இடத்தில் போட்டு புதைத்து உள்ளோம் என்று மேயர் அனடோலி பெடோருக் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறும்போது, புச்சா நகரில் ஒரு தெருவில் நேற்று 20 ஆண்களின் உடல்கள் கிடந்தன. அவர்கள் அனைவரும் தலையின் பின்புறத்தில் சுட்டு கொல்லப்பட்டு உள்ளனர். பலியானவர்களில் ஆண்களும், பெண்களும் இருந்தனர். அவர்களில் 14 வயது சிறுவனும் இருந்துள்ளான் என்று பெடோருக் கூறினார்.

கொல்லப்பட்டவர்களில் சிலர் புச்சாங்கா ஆற்றை கடந்து உக்ரேனிய கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்ல முயன்றபோது கொல்லப்பட்டு உள்ளனர் என்று அவர் கூறினார். ரஷிய ஆக்கிரமிப்பின் விளைவுகளால் ஏற்பட்டவை இவை என்று அவர் வேதனையுடன் கூறினார்.

ரஷ்ய படைகளுக்கு எதிரன போரில் பொதுமக்களில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்று கூற முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அந்த உடல்கள் இன்னும் தெருவிலேயே கிடக்கின்றன. வீரர்கள் அனுமதி கிடைத்ததும், 3 அல்லது 4 நாட்களில் உடல்களை அதிகாரிகள் அப்புறப்படுத்துவார்கள் என்று அவர் கூறியுள்ளார்.



# கடும் கட்டுப்பாடுகளையும் மீறி சீனாவை உலுக்கும் கோரோனா

சீனாவில் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு அதிகரிக்கத்தொடங்கியுள்ளது.

உலகில் முதன் முதலாக கொரோனா கண்டறியப்பட்ட நாடு கொரோனா. கடந்த 2019-ஆம் ஆண்டு கொரோனா சீனாவின் உகான் நகரில் தோன்றி உலக நாடுகளை ஒரு கை பார்த்தது. ஆனால், மிகச்சிறப்பாக கையாண்டு கொரொனா வைரஸ் பரவலை கட்டுக்குள் வைத்தது. பூஜ்ஜிய கொரோனா கொள்கை என கடைபிடித்து ஒரு சிலருக்கு தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டாலும் ஒட்டு மொத்த நகரத்தையும் ஊரடங்குக்குள் கொண்டு வந்து சீனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்தி வருகிறது.

இருப்பினும், கடந்த சில வாரங்களாக அந்நாட்டில் தொற்று பரவல் கட்டுக்கடங்காமல் பரவுகிறது. ஒமைக்ரான் வகை கொரோனா சீனாவின் 12 க்கும் மேற்பட்ட மாகாணங்களில் பரவியுள்ளது. இதனால், அந்நாட்டில் கடந்த 245 மணி நேரத்தில் 13,146- பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில், 1,455 பேருக்கு அறிகுறிகளுடன் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 11,691 அறிகுறிகள் இன்றி கொரோனா உறுதியாகியுள்ளது. புதிதாக உயிரிழப்பு எதுவும் இல்லை. கொரோனா பரவல் காரணமாக சீனோவின் நிதி நகரமான ஷாங்காய் முழுவதும் கடுமையான ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்நகரில் வசிக்கும் 2.5 கோடி பேர் வீடுகளில் முடங்கியுள்ளனர்.



# மராட்டிய மாநிலத்தில் வேகமாக பயணித்த ஒளி: விண்கற்களா, ராக்கேட்டா என மக்கள் அச்சம்



மராட்டிய மாநிலத்தில் பல மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் இரவு வானத்தில் அசாதாரண நிகழ்வை மக்கள் கண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

மராட்டிய மாநிலத்தில் பல மாவட்டங்களில் நேற்று இரவு வானத்தில் வேகமாக நகரும் ஒளி காணப்பட்டது. இந்த அசாதாரண நிகழ்வை மக்கள் தங்கள் செல்போனில் படம்பிடித்து சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொண்டனர்.

முன்னதாக மராட்டிய மாநிலம் நாக்பூர் மற்றும் மத்தியப் பிரதேசத்தின் ஜபுவா, பர்வானி மாவட்டங்களில் இருந்து வானத்தில் வேகமாக பயணித்த ஒளி வெள்ள காட்சிகள் பதிவாகின. விண்ணில் விண்கற்கள் பயணிக்கும் போது பிரகாசமான கோடுகள் உருவாவது வழக்கம். மிகவும் அற்புதமான இந்த காட்சிகள் பெரும்பாலும் கேமராவில் சிக்குவது கிடையாது. 'ஷூட்டிங் ஸ்டார்ஸ்' என்று அழைக்கப்படும் விண்கற்கள் பாறை போன்றபொருட்களாகும். அவை பூமியின் வளிமண்டலத்தில் மிகப்பெரிய வேகத்தில் நுழைகின்றன. விண்வெளியில் ஒரு தூசி நிறைந்த பகுதியைக் கடக்கும்போது அதிவேகமாக அதாவது வினாடிக்கு 30 முதல் 60 கி.மீ வேகத்தில் நுழைகின்றன. அப்போது விண்கல் மழை என்று அழைக்கப்படும் ஒளிக்கோடுகளை உருவாக்குகின்றன. இந்த காட்சிகள்தான் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

முன்னதாக மக்கள் இதனை, ஏதோ ஒரு நாட்டின் செயற்கைக்கோள் தற்செயலாக விழுந்திருக்கலாம் அல்லது வேண்டுமென்றே விழுந்திருக்கலாம். இது விண்கல் பொழிவோ அல்லது தீப்பந்தமாகவோ தெரியவில்லை, ராக்கெட்டாக கூட இருக்கலாம் என்று கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.

வானியலாளர்கள் தற்போது இதுகுறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

# பிரேசிலில் பெய்த கனமழையால் வெள்ளத்தில் மூழ்கிய நகரங்கள்

பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ மாநிலத்தில் கனமழை கொட்டித்தீர்த்தது.

பிரேசில் நாட்டில் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால் அங்குள்ள முக்கிய நகரங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கனமழையின் காரணமாக ரியோ டி ஜெனீரோ மாநிலத்தில் உள்ள ஹெல்ட்ரோ ரோக்கோ நகர் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கனமழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக அங்குள்ள மக்கள் அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் அவதியடைந்து வருகின்றனர். தற்போது நகரை சூழ்ந்துள்ள வெள்ளம் தொடர்பான டிரோன் வீடியோ காட்சிகள் வெளியிடப்பட்டு உள்ளது.

புதிய குரல்

Puthiya Kural News Paper / Magazine / Digital
Global Media House - Print & Digital News Media Company
Editorial/Publisihing: 74A Jannah Road, Addalaichenai 2. Sri Lanka
Tele/Fax: 067 312 9862 Hotline : 77 8614444 / 777 444412
Email: ceo.puthiyakural@gmail.com / puthiyakuralpaper@gmail.com
Web: www.puthiyakural.com / www.fb.com/puthiyakural

# இலங்கை மக்கள் புகட்டியுள்ள பாடம்

இலங்கை வரலாற்றில் இலங்கையர்கள் கண்டிராத பல சம்பவங்கள் அரசியலில் நடந்துகொண்டிருக்கின்றன. பெரும்பாலான சிங்கள மக்களால் ஆட்சிக்கு கொண்டுவரப்பட்ட ஆட்சி இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில், அதே மக்களால் வீட்டுக்கு அனுப்பும் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை இலங்கையில் எந்த அரசாங்கத்துக்கும் ஏற்பட்டதில்லை. சிங்கள தேசத்தை மேல் நிலைக்கு கொண்டு வருவேன் என்ற அறைகூவல் உடன் ஆட்சி பீடமேறிய கோட்டபாய ராஜபக்ச இன்று அதே மக்களால் என்ற கோஷத்துடன் ஒட்டுமொத்த மக்களாலும் வெறுக்கப்பட்ட ஒரு செல்லாக்காசான நபராக உருவெடுத்திருக்கிறார். ஏற்கனவே விலைவாசி உயர்வாலும், அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டாலும் நொந்து போயிருந்த மக்கள், மின்சார துண்டிப்பால் ஏற்பட்ட அவலத்தை பொறுத்துக்கொள்ளாமல் நிரந்தரமாக வீதியில் நின்று அரச எதிர்ப்பை காட்டுவதற்கு தயாராகினர். அதற்கமைய ஜனாதிபதி கோத்தபாயவின் வீட்டுக்கு அருகில் கூடி பெரும் போராட்டம் ஒன்றை நடத்திய மக்கள், அதனை தொடர்ந்து நாடு முழுவதும் பெருமெடுப்பில் போராட்டங்களை நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். குறிப்பாக அரசாங்கத்தின் வீட்டுக்கு அனுப்பும் வரை போராட்டத்தை முன்னெடுப்பதென மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

தவறான பொருளாதார கொள்கை, திமிரான வெளியுறவு கொள்கை, சீனாவுடனான நெருங்கிய உறவு, சிறுபான்மையினரை ஒரு பொருட்டாகவே கருதாத தன்மை. இவைதான் இன்று ராஜபக்சக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு பின்னால் உள்ள பின்னணி. இனவாதத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு ஆட்சியை கைப்பற்றிய ராஜபக்ச தரப்பு இன்று யாரை மகிழ்விப்பதற்காக இனவாதத்தை கையிலெடுத்ததோ அதே மக்களாலேயே துரத்தியடிக்கப்படவிருக்கிறார்கள். பொது ஜன பெரமுன மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கைகள் குறிப்பாக ராஜபக்ச குடும்பத்தில் இருந்த எதிர்பார்ப்புகள் யாவும் கரைந்து போயுள்ளன. இனி, ராஜபக்ச அணி இந்த நாட்டுக்கு தேவையில்லை என்ற நிலைமைக்கு மக்கள் வந்துவிட்டார்கள். இனி இந்த அரசாங்கம் இருந்து எந்த பிரயோசனத்தையும் நாட்டு மக்களுக்கு தரப்போவதில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மறுபக்கம் ராஜபக்சக்கள் மீதான சிங்கள மக்களின் விரக்தி, சிறுபான்மை மக்கள் மீதான கரிசனையை சிங்கள மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கிறது. இன்று நடக்கின்ற பல போராட்டங்களில் சிங்கள மக்கள் இனவாத கருத்துக்களை வெளியிடுவதை தவிர்த்து, தமிழர்கள், மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் இந்த நாட்டின் மக்கள் என்றும் இந்த நாட்டில் இனவாதம் என்ற பேச்சுக்கே இனி இடமில்லை என்ற கோஷங்களை முன்வைத்ததை அவதானிக்க முடிந்தது. இது ஒரு சிறந்த சூழலை தமிழ் தரப்புகளுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இனிவரும் அரசாங்கங்கள் இந்த நாட்டில் இனவாதத்துடன் ஆட்சிக்கு வர முடியாது என்ற ஒரு நிலைமையையும் ராஜபக்ச அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. இதனை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்கான தலைமைத்துவம் தமிழ் தலைவர்களிடம் இருக்கிறதா என்பது கேள்விக்குறியே.

மக்களை நீண்ட காலத்துக்கு ஏமாற்ற முடியாது என்பதற்கு இலங்கையில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமை மிகப்பெரிய எடுத்துக்காட்டாகும்.இந்த நாட்டில் வாழ்கின்ற சிங்கள மக்களுக்கு காலாகாலமாக இனவாதத்தை ஊட்டி ஆட்சி செய்த அரசாங்கங்கள் , தங்களுடைய நலன்களிலும் தங்களுடைய பொருளாதாரத்தை வளர்ப்பதிலும் கவனம் செலுத்தினார்களே தவிர,நாட்டின் வளர்ச்சி தொடர்பிலோ நாட்டு மக்களின் வளர்ச்சியிலேயோ கவனம் எடுத்த வரலாறு இலங்கையில் இருந்ததில்லை. சுதந்திரத்துக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் சிங்கள மக்களுக்கிடையில் இனவாதத்தை பரப்பி, அதனூடாக குளிர்காய்ந்ததுடன், 30 வருட போர் காலத்தில் யுத்தத்தை காரணம் காட்டி மக்களை ஏமாற்றிவந்த அரசாங்கங்கள், அதன் பின்னர் அபிவிருத்தி என்ற போர்வையில் நாட்டின் வளங்களையும் பெரும் தொகையான பணத்தையும் கொள்ளையடித்தது. அதன் பலனையே நாடு இன்று எதிர்கொள்கிறது.இந்த நாட்டில் சிறுபான்மையின மக்களுடன் அரசாங்கங்கள் கொண்டிருக்கின்ற பகைமைகள் களையப்படுவரை இந்த நாட்டுக்கு விடிவு இருக்கப்போவதில்லை. ராஜபக்ச அரசாங்கம் மக்கள் போராட்டங்களால் கவிழ்க்கப்படுமா? வீட்டுக்கு அனுப்பப்படுமா? என்பதற்கு அப்பால் இனிவரும் அரசுகளுக்கு சிறந்த ஒரு பாடத்தை இலங்கை மக்கள் புகட்டியிருக்கிறார்கள்.

# பிளேட்டினால் கைகளை வெட்டும் மாணவர்கள்

## கிளிநோச்சியில் மர்மம்

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் சுமார் 20 மாணவர்கள் பிளேட்டினால் தங்களது கைகளை தாங்களே வெட்டிக்கொண்டுள்ளார்கள் என சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களுக்கு முன் தரம் ஒன்பதில் கல்வி பயிலும் மாணவர்கள் பலர் பிளேட்டினால் தங்களது கைகளை தாங்களே வெட்டியுள்ளனர்.

பின்னர் குருதியை கடதாசி மூலம் துடைத்துவிட்டு, கிருமிதொற்று நீக்கி (sanitizer) காயத்தின் மேல் வீசிறிக்கொண்டதாக நேரில் பார்த்த சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை குறித்த மாணவர்கள் சாதரணமாக செய்து கொள்வதாகவும், ஒருவரை ஒருவர் பார்த்து வெட்டிக்கொண்டதன் மூலமே வெட்டியவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாகவும் சக மாணவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் ஒருவித உளவியல் பிரச்சினையாக கூட இருக்கலாம் என தெரிவிக்கும் வைத்தியர்கள், மாணவர்களுடன் உரையாடி அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

கோபத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் ஒரிரு மாணவர்கள் செய்வதனை பார்த்து ஏனைய மாணவர்களும் இவ்வாறு செய்து கொண்டதாகவும், கட்டிளம் பருவத்தில் மாணவர்கள் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுப்படுவதாகவும் தெரிவித்துள்ள உளநல மருத்துவர் ம.ஜெயராசா, இவ்வாறு கைகளில் வெட்டுக்கொள்ளும் மாணவர்கள் அனைவரும் கட்டாயம் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான மாணவர்கள் அல்ல எனுவும் குறிப்பிட்டார்.

அத்தோடு, கைகளை வெட்டிக் கொள்ளும் மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைள் நிறைவுற்று வேலை வாய்ப்புக்கள் முக்கியமாக பொலிஸ், நீதித்துறை மற்றும் இராணுவம் உள்ளிட்ட பல தொழில்துறைகளுக்கு நேர்முகத் தேர்வுகளுக்குச் செல்லும் பெரும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

# ராஜபக்சாக்கள் நாட்டிலிருந்து தப்பியோட முயல்கின்றனரா?



ராஜபக்சாக்கள் நாட்டிலிருந்து தப்பியோட முயல்கின்றனர் என கொழும்பில் தகவல்கள் பரவுவதாக இந்தியாவின் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது அதுமேலும் தெரிவித்துள்ளதாவது. இலங்கையில் பொருளாதார நிலை மிக மோசமடைந்துள்ளது,இதற்கு மத்தியில் ராஜபக்சாக்கள் இலங்கையிலிருந்து தப்பியோட முயல்கின்றனர் என்ற தகவல்கள் கொழும்பில் காட்டுதீ போல பரவுகின்றன.கட்டுநாயக்காவிலும் இரத்மலானையிலும் ராஜபக்சாக்களை ஏற்றிக்கொண்டு பயணிப்பதற்காக இரண்டு விமானங்கள் தயார் நிலையில் உள்ளன என்ற தகவல்களும் கொழும்பில் காணப்படுகின்றன.

முதல்குடும்பம் மீதான பொது மக்களின் சீற்றம் கட்டுப்படுத்த முடியாததாக மாறியுள்ளதால் இந்த நிலை உருவாகியுள்ளது. எனினும் ராஜபக்ச சகோதரர்களிற்கு நெருக்கமான வட்டாரங்கள் இதனை நிராகரித்துள்ளன,சகோதரர்கள் பிரச்சினைகளிற்கு தீர்வை காணமுயல்கின்றனர் என அவை தெரிவித்துள்ளன.கொழும்பில் பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தியாதிரும்பிய மறுநாள் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் வீட்டை முற்றுகையிட்டனர்.

கொழும்பில் உள்ள ராஜபக்சாவின் வீட்டிற்கு செல்லும் ஒவ்வொரு வீதியிலும் ஆர்ப்பாட்டம் வெடித்தது, கோ ஹோம் கோத்தா என்ற பதாதைகளுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்பட்டனர்.மிரிஹானவில் உள்ள பங்கிரிவத்தையில் பதட்டமான சூழ்நிலை நிலவியதை தொடர்ந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டது.கோத்தபாய ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் பெருப்பிக்கப்பட்ட யூப்பிலி சந்தி வியாழக்கிழமை முதல் பாரிய ஆர்ப்பாட்டங்களை சந்தித்தவண்ணமிருந்தது.எங்களிற்கும் குழந்தைகள் உள்ளன என பதாகைகளுடன் பெண்களும் குழந்தைகளும் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டனர்.

கோத்தபாய ராஜபக்ச தனது பணியை முடித்துக்கொண்டு வீகடு திரும்புவதை இலகுவாக்குவதற்காக யூப்பிலி சந்தி புனரமைக்கப்பட்டது.கொழும்பும் நாட்டின் ஏனைய பகுதிகளும் 13 மணிநேர மின்வெட்டினை எதிர்கொண்டுள்ளன,எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தங்களால் சேவையில் ஈடுபடமுடியாது என தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமையுள்ளது

இலங்கை மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமையுள்ளது என அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

மிரிஹானவில் அமைந்துள்ள ஜானாதிபதியின் இல்லத்தினை முற்றுகையிட்டு பெரும்திரளான மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இந்தநிலையில் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அமெரிக்க தூதுவர் இவ்வாறு



தெரிவித்துள்ளார். இது ஜனநாயக வெளிப்பாட்டிற்கு அவசியமானது. நான் நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கின்றேன். எதிர்வரும் நாட்கள் அனைத்து தரப்பினருக்கும் பொறுமையை கொண்டுவரும் என கருதுகின்றேன்.

துயரத்தில் சிக்குண்டுள்ளவர்களிற்கு மிகவும் அவசியமான பொருளாதார ஸ்திரதன்மையும் நிவாரணத்தையும் கொண்டுவரும் எனவும் எதிர்பார்க்கின்றேன். எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார் .